பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

03 04 2025 — 7 15 — செய்தி ஆசிரியர்

வியாழக்கிழமை — இரவு — ஜெ. காமராஜ்

வணக்கம், ஆகாஷவாணி

செய்திகள் - வாசிப்பவர் - பிரியதர்ஷினி

தலைப்புச் செய்திகள்

- இந்தியாவுக்கும், தாய்லாந்துக்கும் இடையே தகவல் தொழில்நுட்பம், கடல்சார் பாதுகாப்பு, கைவினைப்பொருட்கள் தயாரிப்பு உள்ளிட்ட துறைகளில் 6 முக்கிய ஒப்பந்தங்கள் இன்று கையெழுத்தாகின.

- தென் அமெரிக்க நாடுகள் இந்தியாவுடன் வர்த்தகம் மேற்கொள்ள சிலி பெரிதும் உதவிடும் என்று அந்நாட்டு அதிபர் திரு. Gabriel Boric Font தெரிவித்துள்ளார்.

- முப்படையினர் நீண்டகால மற்றும் குறுகிய கால சவால்களை எதிர்கொள்வதற்கு எப்போதும் தயாராக இருக்க வேண்டும் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கேட்டுக்கொண்டுள்ளார்.

- நேபாளத்தில் இருந்து சிமெண்ட், பிளைவுட் உள்ளிட்ட பொருட்களை இறக்குமதி செய்வதற்கான தடையை இந்திய தர நிர்ணய கழகம் நீக்கியுள்ளது.

- ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் கொல்கத்தா அணி இன்று ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது.

*-- இனி விரிவான செய்திகள் --*

இந்தியா – தாய்லாந்து இடையிலான நட்புறவை வலுப்படுத்தும் வகையில் இரு நாடுகளுக்கு இடையே 6 முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

தகவல் தொழில்நுட்பம், கடல்சார் பாரம்பரிய பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி, சிறுதொழில்கள், கைவினைப்பொருட்கள் உள்ளிட்ட முக்கிய துறைகளில் இந்த ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன.

அப்போது பேசிய பிரதமர் திரு. நரேந்திர மோடி, இந்தியாவுக்கும், தாயலாந்துக்கும் இடையேயான கலாச்சாரம் மற்றும் ஆன்மிக நட்புறவு பன்னெடுங்காலமாக வேரூன்றி வந்துள்ளதாகத் தெரிவித்தார்.

இரு நாடுகளுக்குமிடையே சுற்றுலா, கல்வி, கலாச்சாரம் மற்றும் நிதிசார் தொழில்நுட்பத்தில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு தாய்லாந்து பிரதமர் Paetongtarn Shinawatra புத்தரின் போதனைகள் கொண்ட வேத புத்தகத்தை பரிசளித்தார்.

புத்தரின் போதனைகள் கொண்ட திரிபீடக வேதநூலை தமக்கு பரிசளித்த தாய்லாந்து பிரதமருக்கு, பிரதமர் திரு. நரேந்திர மோடி நன்றி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், பாலி மொழியில் எழுதப்பட்ட இந்த வேதநூல் தமக்கு பரிசளிக்கப்பட்டதை தம் வாழ்வின் முக்கிய தருணமாகக் கருதுவதாகக் கூறியுள்ளார்.

பாலி மொழிக்கு இந்தியா செம்மொழி அந்தஸ்து வழங்கி கௌரவித்துள்ளதையும் பிரதமர் திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

எல்.கே. – ஹா — ஏர்நெட் - 19

தென்னமெரிக்க நாடுகள் இந்தியாவுடன் வர்த்தகம் மேற்கொள்ள சிலி பெரிதும் உதவிடும் என்று அந்நாட்டு அதிபர் திரு. Gabriel Boric Font தெரிவித்துள்ளார்.

அரசுமுறைப் பயணமாக இந்தியா வந்துள்ள அவர் இன்று மும்பையில் மகாராஷ்டிர மாநில ஆளுநர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணனை ஆளுநர் மாளிகையில் சந்தித்துப் பேசினார்.

இந்தியாவின் கலாச்சாரத்தை சிலி கற்க விரும்புவதாகவும், இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார, வர்த்தக உறவுகளை மேலும் வலுப்படுத்த விரும்புவதாகவும் அவர் கூறினார்.

இரு நாடுகளும் இணைந்து திரைப்படத் தயாரிப்பில் ஈடுபட வேண்டும் என்றும் அவர் மகாராஷ்டிர ஆளுநரிடம் கேட்டுக்கொண்டார்.

வர்த்தகமும், சுற்றுலாவும் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்துவதற்கு உதவும் என்று மகாராஷ்டிர ஆளுநர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் சிலி அதிபரிடம் கூறினார்.

எல்.கே. — ஹா ஏர்நெட் - 11

முப்படையினர் நீண்டகால மற்றும் குறுகிய கால சவால்களை எதிர்கொள்வதற்கு எப்போதும் தயாராக இருக்க வேண்டும் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கேட்டுக்கொண்டுள்ளார்.

புதுதில்லியில் நாளை ராணுவ தளபதிகள் மாநாட்டில் உரையாற்ற உள்ள நிலையில் இதனைத் தெரிவித்துள்ள திரு. ராஜ்நாத் சிங், மாறிவரும் சூழலுக்கு ஏற்ப போர்முறைகளில் மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டியது அவசியம் என்று கூறியுள்ளார்.

புதிய உத்திகளையும், அணுகுமுறைகளையும் கடைபிடிக்க வேண்டியது அவசியம் என்றும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் வடக்கு எல்லைப் பகுதிகளில் ராணுவத்தினர் மிகுந்த உறுதியுடனும், தைரியத்துடனும் பணியாற்றி வருவது தமக்கு மிகுந்த நம்பிக்கை அளிப்பதாக திரு. ராஜ்நாத் சிங் கூறினார்.

நாட்டின் மேற்கு எல்லைப் பகுதி குறித்து குறிப்பிட்ட திரு. ராஜ்நாத் சிங், ஜம்மு-கஷ்மீர் பகுதியில் அமைதியை நிலைநாட்டும் வகையில் ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

எல்.கே. — ஹா ஏர்நெட் - 17

கடலோர கப்பல் போக்குவரத்து மசோதா இன்று மக்களவையில் நிறைவேறியது.

இந்திய கடலோர பகுதியில் வர்த்தகத்திற்கான கப்பல் போக்குவரத்தை முறைப்படுத்தும் நோக்கில் இம்மசோதா கொண்டுவரப்பட்டுள்ளது.

உள்நாட்டுப் நீர்வழிப் பகுதிகளிலும், கடல்சார் பகுதிகளிலும் வர்த்தகப் போக்குவரத்தை இம்மசோதா முறைப்படுத்துகிறது.

நாட்டின் கடலோர எல்லைப் பகுதி பாதுகாப்புக்கு பாதிப்பு ஏதும் ஏற்படாத வகையில் வர்த்தக ரீதியிலான கடல்சார் போக்குவரத்தை கொண்டு வருவதற்கு இம்மசோதா வகை செய்கிறது.

இம்மசோதா மீதான விவாதத்திற்கு பதிலளித்துப் பேசிய மத்திய கப்பல் போக்குவரத்து மற்றும் உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால், போக்குவரத்து உறுதி செய்யப்பட்டால் மட்டுமே பொருளாதாரம் வளர்ச்சியடையும் என்ற பிரதமர் திரு. நரேந்திர மோடியின் கருத்தை வரவேற்பதாக அவர் கூறினார்.

கடந்த 10 ஆண்டுகளில் கப்பல் போக்குவரத்துத் துறை பல்வேறு சாதனைகளைப் படைத்திருப்பதாக அவர் கூறினார்.

கடல்சார் போக்குவரத்து நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் முக்கியப் பங்காற்றுவதாகவும் அவர் கூறினார்.

03 04 25 7 15 கப்பல் போக்குவரத்து மசோதா-2

கடலோர கப்பல் போக்குவரத்து மசோதா மாநிலங்களின் கூட்டாட்சி தத்துவத்திற்கு உகந்த வகையில் அமைந்துள்ளதாகவும் திரு. சர்பானந்த சோனோவால் கூறினார்.

எல்.கே. — ஹா ஏர்நெட் - 19

உச்சநீதிமன்ற தீர்ப்புகளை 18 இந்திய மொழிகளில் மொழிபெயர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய சட்டத்துறை அமைச்சர் திரு. அர்ஜுன்ராம் மேக்வால் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனைத் தெரிவித்த அவர், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தீர்ப்புகள் மொழிபெயர்க்கப்படுவதை கண்காணிக்க உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றங்களில் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

2025 மார்ச் வரையிலான நிலவரப்படி 47 ஆயிரத்து 439 தீர்ப்புகள் இந்திய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு உச்சநீதிமன்றத்தின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதில் 2 ஆயிரத்து 808 தீர்ப்புகள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளதாகவும் திரு. அர்ஜுன்ராம் மேக்வால் தெரிவித்தார்.

பிரியா — ஹா ஏர்நெட் - 13

நாட்டின் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை உலகெங்கிலும் கொண்டு செல்வதற்கான அரசின் நடவடிக்கைகளில் டிஜிட்டல் தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டு வருவதாக மத்திய கலாச்சாரம் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. கஜேந்திரசிங் ஷெகாவத் கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனைத் தெரிவித்த அவர், இந்தியாவின் கலாச்சார பாரம்பரியத்தையும், காலத்தால் அழியாத கலைப் படைப்புகளையும் பாதுகாக்கும் பொருட்டு டிஜிட்டல் வடிவிலான கலைக் களஞ்சியங்கள் உருவாக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

நமது பாரம்பரியத்தின் பெருமைகளை மற்ற நாட்டவரும் அறிந்துகொள்ளும் வகையில் டிஜிட்டல் தளங்கள் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

மேலும் கலை மற்றும் கலாச்சார நிகழ்வுகளில் மக்களின் பங்கேற்பை ஊக்கவிக்கவும் அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

இவற்றின் மூலம் வளர்ச்சியடைந்த இந்தியா இலக்கை அடைவதற்கான பயணத்தில் கலாச்சார நடவடிக்கைகள் மற்றும் அவை சார்ந்த பொருளாதார வளர்ச்சி உதவிகரமாக இருக்கும் என்றும் திரு. கஜேந்திரசிங் ஷெகாவத் கூறினார்.

பிரியா — ஹா பிஜபி — 15

நேபாளத்தில் இந்திய நிதியுதவியுடன் 10 சமூக மேம்பாட்டுத் திட்டங்களை மேற்கொள்வதற்கான ஒப்பந்தங்கள் இன்று கையெழுத்தானது.

காத்மாண்டுவில் உள்ள இந்திய தூதரகம் மற்றும் அந்நாட்டு அரசுக்கு இடையே இந்த ஒப்பந்தங்கள் கையெழுத்தானது.

இதன் மூலம் பள்ளிக் கட்டிடங்கள், மருத்துவமனைகள் மற்றும் நூலக கட்டிடங்களின் கட்டுமானம் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

நேபாள மக்கள் சிறந்த கல்வி மற்றும் சுகாதார வசதிகளைப் பெற இத்திட்டங்கள் வழிவகுக்கும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

2003ஆம் ஆண்டில் இருந்து இதுவரை கல்வி, சுகாதாரம், சாலைக் கட்டமைப்பு, மின்சார வசதி, நீர்ப்பாசனம் உள்ளிட்ட பல்வேறு துறைகளிலும் 573 சமூக மேம்பாட்டுத் திட்டங்களை இந்தியா மேற்கொண்டுள்ளதாகவும், இவற்றில் 495 திட்டங்கள் நிறைவடைந்துள்ளதாகவும் அவர் மேலும் கூறுகிறார்.

பிரியா — ஹா ஏர்நெட் - 11

நேபாளத்தில் இருந்து சிமெண்ட், அட்டைப் பெட்டிகள், பிளைவுட் உள்ளிட்ட பொருட்களை இறக்குமதி செய்வதற்கான தடையை இந்திய தர நிர்ணய கழகமான BIS நீக்கியுள்ளது.

இப்பொருட்களை இறக்குமதி செய்வதற்கான நடைமுறைகளில் திருத்தங்கள் செய்து சான்றளிப்பதற்கான புதிய முறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதை அடுத்து இப்பொருட்களை நேபாளம் ஏற்றுமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற இந்திய — நேபாள வர்த்தகத் துறை செயலர்கள் நிலையிலான பேச்சுவார்த்தையின்போது இந்திய தரப்பில் இப்பொருட்களுக்கு தர நிர்ணய கழகத்தின் சான்றிதழ் பெற வேண்டியது அவசியம் என்று வலியுறுத்தப்பட்டது.

எல்.கே. — ஹா ஏர்நெட் - 9

பாகிஸ்தானில் உள்ள ஆஃப்கனிஸ்தான் நாட்டவரை வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகளை பாகிஸ்தான் அதிகாரிகள் தீவிரமாக மேற்கொண்டு வருகின்றனர்.

ஆஃப்கனிஸ்தானை சேர்ந்தவர்கள் தாங்களாகவே வெளியேறுவதற்கு விதிக்கப்பட்டிருந்த காலக்கெடு முடிவடைந்ததையடுத்து சட்டவிரோதமாக தங்கியுள்ள வெளிநாட்டவர் மற்றும் ஆஃப்கனிஸ்தான் குடியுரிமை அட்டை பெற்றவர்கள் ஆகியோரை கைது செய்து முகாம்களில் தங்க வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அவர்களை குறிப்பிட்ட காலத்திற்குள் தங்கள் சொந்த நாட்டிற்கு அனுப்பி வைப்பதற்கான முயற்சிகளையும் அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர்.

இதனிடையே ஆஃப்கனிஸ்தானில் தாலிபன் அரசு தங்கள் நாட்டவரை பாகிஸ்தானில் இருந்து வெளியேற்றும் நடவடிக்கைகளை ஒத்திவைக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளது.

இருப்பினும் இதனை இஸ்லாமாபாத் மறுத்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாகிஸ்தானில் தற்போது 13 லட்சத்துக்கும் மேற்பட்ட ஆஃப்கன் நாட்டவர்கள் இருப்பதாக ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

எல்.கே. — ஹா ஏர்நெட் - 14

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் கொல்கத்தா அணி இன்று ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது.

கொல்கத்தாவில் நடைபெறும் இப்போட்டியில் டாஸ் வென்ற ஹைதராபாத் அணி முதலில் பந்துவீச தீர்மானித்துள்ளது.

------------

உலகக்கோப்பை குத்துச்சண்டை போட்டியில் இந்தியாவின் Manish Rathore, Abhinash Jamwal மற்றும் Hitesh அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

பிரேசிலில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் 55 கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் Manish Rathore-ம், 65 கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் Abhinash Jamwal–யும் 70 கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் Hitesh–ம் வெற்றிபெற்றனர்.

-------------------

Manchester ஓபன் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் அபய் சிங் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 9-11, 11-1, 11-2, 11-9 என்ற செட் கணக்கில், இஸ்ரேலின் Daniel Poleshchuk—ஐ வென்றார்.

எகிப்தில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் லஷ்மணன் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

முதல் சுற்று ஆட்டத்தில் அவர் 7-5, 6-2 என்ற செட் கணக்கில், இங்கிலாந்தின் Nicholas Adesalu—ஐ வென்றார்.